இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 22.06.2016

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 30°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் பரவலான மழை பெறப்பட்டது.

**வானிலை முன்னறிவிப்புமற்றும் அறிவுரைகள் (22.06.2016 முதல் 26.06.2016)**

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நான்கு நாட்களுக்கும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 73 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்

**வேளாண் அறிவுரை**

- ✓ அதிக அளவிலான மேகமூட்டம் தென்பட வாப்புள்ளதால், இறவை மஞ்சள், மக்காச்சோளம், கம்பு ஆகிய பயிர்களுக்கு மண் மூலம் உரம் அளிப்பதை தவிர்க்கவும்.
- ✓ காற்றின் வேகம் மணிக்கு 20 கிலோ மீட்டர் வேகத்துடனும் மற்றும் லேசான தூறல் மழையும் எதிர்பார்க்கப்படுவதால் முதிர்வடைந்த வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலை காரணமாக, திராட்சை கொடிகளை கத்தரித்து, தொடர்ந்து போர்டோ கலவை (அல்லது) ஏதேனும் தாமிர பூஞ்சாணக் கொல்லியை 0.25 சதம் தெளிக்கவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலை காரணமாக, மல்லிகை செடிகளுக்கு 10 கிலோ தொழுஉரம் மற்றும் ஒரு செடிக்கு 60கிராம், தழைச்சத்து 120 கிராம் மணிச்சத்து, மற்றும் 120 கிராம் சாம்பல்ச்சத்து என்ற அளவில் உரமிடவும்.
- ✓ அதிக காற்றின் ஈரப்பதம் நிலவுவதால், பால் கறப்பதற்கு முன்னும் பின்னும் ஒரு சதம் பொட்டாசியம் பர்மாங்கனேட் **(Pottasium permanganate)** கரைசல் கொண்டு மடியை கழுவவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 34°செ முதல் 37°செ ஆகவும்,குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 48 முதல் 70 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 7 கி.மீ முதல் 24 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த சில நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் உளுந்து பயிரினை தக்க பாதுகாப்புடன் அறுவடை செய்யவும்.
- ✓ குறுவை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். கடைசி உழவின் போது நாற்றாங்காலுக்கு 40 கிலோ டிஏபி உரம் அடியுரமாக இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஷிப்சமும், ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும்.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 34°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 46 முதல் 70 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 3 கி.மீ முேதல் 15 கி.மீவேகத்தில்வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் எலுமிச்சையில் சொறிநோயின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனை கட்டுப்படுத்த எக்டருக்கு ஸ்டெப்டோமைசின் சல்பேட் (**Steptomycin sulphat**) 50 கிராம் மற்றும் 150 கிராம் காப்பர் ஆக்ஸி குளோரைடு (**Copper Oxychloride**) மருந்தினை 500 லிட்டரில் நீரில் கலந்து கைத்தெளிப்பானை பயன்படுத்தி தெளிக்கவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் காற்றின் வேகத்தினால் பழத்தோட்டத்தில் உள்ள பழமரங்களில் அதிக நீராவிப்போக்கின் காரணமாக நீர்பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. எனவே தேவையான நீர்ப்பாசனம் செய்யவும்.

- ✓ புதிய பழமரக்கன்றுகள் நடவிருக்கும் விவசாயிகள், பழமரங்களுக்கேற்றவாறு தேவையான குழி அளவு மற்றும் இடைவெளியில் குழிகள் தோண்டி காற்றோட்டமாக வைக்கவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக காற்றின் வேகம் காரணமாக வாழைக்கு மரம் சாயாதவாறு சவுக்கு மர கட்டைகளை கொண்டு முட்டு கொடுக்கவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை தேனி,புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களில் இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 35°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது 26°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேரகாற்றின் ஈரப்பதம் 55 முதல் 85 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 20 கி.மீ முதல் 24 கி.மீ வேகத்திலும் மற்ற மாவட்டங்களில் 10 கி.மீ முதல் 15 கி.மீ வரையிலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ விவசாயிகள் காய்கறிப்பயிர்களில் சாறு உண்ணும் பூச்சியைக் கட்டுப்படுத்த 5 சதவீத வேப்பங்கொட்டை சாறு தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ காற்றின் வேகம் 15 கி.மீ அளவுக்கு வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் கோழித்தீவனங்களை கோழிகூடாரங்களில் இருந்து காற்று அடித்து செல்லாமல் பாதுகாக்கவும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலோசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 18°செ ஆகவும்,இரவுநேர வெப்பநிலை11°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரக் காற்றின் ஈரப்பதம் 93 முதல் 95 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மிளகுச்செடிக்கு பருவமழை காலத்தில் 200 கிராம் யூரியா 110 கிராம் சூப்பர் பாஸ்பேட் 110 கிராம் பொட்டாஸ் உரம் இடவும்.
- ✓ நீலகிரி மாவட்டத்தில் தொடர் மழை எதிர்பார்க்கப் படுவதால், தோட்டத்தில் உரிய வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- ✓ மேராக்காய் நடவின் போது, 6 அடி x 8 அடி இடைவெளியில் 45 செமீ கன அளவு குழியில், குழிக்கு 3 காய் வீதம், 10 கிலோ தொழுஉரம், 250 கிராம் யூரியா, 500 கிராம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 500 கிராம் பொட்டாஸ் இட்டு நடவு செய்யவும்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களில் இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 25°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 68 முதல் 78 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது.காற்று மணிக்கு 4 கி.மீ முதல் 5 கி.மீவேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

தென்மேற்கு பருவமழையின் தாக்கத்தால் காற்றின் வேகமும், மேகமூட்டமும் சற்று அதிகரித்து காணப்படும். பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் கோழிகளுக்கு சாதகமான வானிலையை தொடர்ந்து உருவாக்கும். மழைக்கான வாய்ப்பு குறைவாக காணப்படுகிறது, கோழித்தீவனத்திற்கான மூலப்பொருட்களில் குறிப்பாக மக்காச்சோளம் போன்ற தானியங்கள் வரத்து குறைந்துள்ளதால், அவற்றின் கொள்முதலும், அவற்றின் தரத்திலும் மிகுந்த எச்சரிக்கையுடனும், கவனமாகவும் கையாளப்பட வேண்டும். தீவனத்தில் எரிசக்தியின் அளவை கூட்டித்தருவதோடு மட்டுமன்றி, தீவனம் காற்றில் விரயமாகாமல் தடுக்கும் முறைகளை பின்பற்ற வேண்டும். எண்ணை மற்றும் மொலஸ்ஸஸ் ஆகியவற்றை தீவனத்தில் சிறு அளவில் பயன்படுத்தலாம்.

- ✓ **கர்நாடாகா மாநிலத்திலிருந்து பறவை காய்ச்சல் நோய் பரவுவதால் உரிய மருத்துவ பாதுகாப்பு கோழிப்பண்ணைகளுக்கு எடுத்துக்கொள்ளவும்.**
- ✓ கரும்பில் தற்பொழுது வெள்ளை கம்பளி அசுவுனி தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த அசிபெட் (Aciphat) என்ற பூச்சிக்கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலான மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 32°செமுதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேர காற்றின் ஈரப்பதம் 70 மற்றும் 90 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 7 கி.மீவரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த மூன்று நாட்களுக்கு இலேசானது முதல் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.
- ✓ மழை பெய்யவாய்ப்புள்ளதால் உழவர்கள் தங்களுடை பயிர்களுக்கு உரம் மற்றும் பூச்சிகொல்லி மருந்தினை தெளிப்பதை தள்ளி போடவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 30°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 23°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 82 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 13 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழையளவைப் பொறுத்து நிலம் தயார் செய்யலாம்.
- ✓ மரவகை வாசனைப் பயிர்கள் மற்றும் இரப்பர் மரங்களில் மூட்டுப்பகுதிகளை சுத்தப்படுத்தி கிளறி விடவேண்டும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் வேர் விட்ட மிளகு குச்சிகளை நடவு செய்யலாம்.
- ✓ காற்று 13 கி.மீ வேகத்தில் எதிர்பாாக்கப்படுவதால் இளம் இரப்பர் மரங்களுக்கு ஊன்று அளிக்கலாம்..
- ✓ காற்று 13 கி.மீ வேகத்தில் எதிர்பாாக்கப்படுவதால் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**
**த.நா.வே.ப.கழகம்,கோவை.**